# நண்பனை நவிலும் நா



மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனை நவிலும் நா

மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

★நூலின் பெயர் :- நண்பனை நவிலும் நா

★விடயம் :- கவிதை

★ஆசிரியர் :- மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்

★வெளியீடு :- உமர் நெய்னார் புலவர் கழகம் மூதூர்

★உரிமை :- ஆசிரியருக்கு

★முதற் பதிப்பு :- மே 2016

★பிரதிகள் :- 500

★ISBN :- 978-955-42444-3-6

★விலை :- 175/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



நீதியைத் தட்டிக் கேட்கின்ற
நன்றாம் தன்மை கொண்டிட்டோன்
பூதல மீதில் என்றும் நற்
புனிதம் காத்து வாழ்ந்திட்டோன்

கொடுமையைக் கண்ட போதினிலே
கொதித்தெழுந் தெதிர்த்து நின்றிட்டோன்
வடுவது இல்லா நிலையினிலே
வாய்மையில் வாழ்ந்து வந்திட்டோன்

அன்பு கடங்கிப் போகின்ற
அருங் குணம் அதிகம் கொண்டிட்டோன்
பணிவுடன் பழகும் தன்மைதனைப்
பற்றிப் பிடித்தே திகழ்ந்திட்டோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சம் அறியாத் தன்மையது
அமைந்தே உலகில் மிளிர்ந்திட்டோன்
துச்சம் உயிரும் என்றேதான்
தூய வீரம் காத்திட்டோன்

அன்னோன் எந்தன் அரும்நண்பன்
அகம்நிறை எம்.எஸ்.றியாஸ் என்போன்
வன்செயல் ஏந்திய ரவை தன்னால்
வாழ்வை மண்ணில் இழந்திட்டோன் (27-10-1987)

நண்பனை நவிலும் நாநூலை
நானும் நண்பன் றியாசுக்கு
உன்னதம் என்று கருதியே
உயரிய சமர்ப்பணம் செய்கின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந் நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

1. அமைதிப் பூக்கள் [ கவிதை ]
2. மூதூர் உமர் நெய்னார் புலவர் கவிதைகள் [ தொகுப்பு ]
3. மூதூர் உமர் நெய்னார் புலவரின் சீறாப்புராண உரை [மறுப்பதிப்பு]
4. மனிதம் [கவிதை]
5. ஊர்துறந்த காவியம்
6. நாயகக் காவியம் [ 2015 - கிழக்கு மாகாணச் சாகித்திய விருது பெற்றது ]
7. அன்பின் மகனுக்கு [ கடிதங்களின் தொகுப்பு ]
8. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம் முகைதீன் கவிதைகள் [ தொகுப்பு ]
9. அதிமேதகு ஜனாதிபதிக்கு ஓர் மடல்
10. மழலைக் கீதம் [ சிறுவர் பாடல்கள் ]
11. இஸ்லாமியக் குறள்
12. அஷ்ரஃப் அமரகாவியம்
13. வசந்தம் [ கவிதை ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. யதார்த்தம் [கவிதை]

15. எந்தன் ஊரே [ கவிதை ]

16. வாப்பு மரைக்கார் வழிக்காவியம்

17. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம் முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள் [ஆய்வு]

18. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம் முகைதீன் கவிதைகளில் மூதூர மீனவர்களின் உயர்ச்சி நாட்டம் [ஆய்வு]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவர உள்ள நூல்கள்

- மாநபியின் மாமகிமை [ கவிதை ]
- மஜீது மாகாவியம்
- சிறுவர் கவிப்பேழை
- இஸ்லாமிய வெண்பா
- நான் கண்ட அரசியல்த் தலைமை
- நெய்தல் நகர் வட்டம் பாலநகர் மக்களின் கல்வி பற்றி மூதூர் உமர் நெய்னார் புலவரின் ஆதங்கம் [ஆய்வு]
- கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம் முகைதீன் கவிதைகளில் தாய்மை உணர்வுகள் [ஆய்வு]
- மூதூர் சுனாமிக் காவியம்
- மூதூர் படகு மூழ்கிய காவியம்
- உன்னதம் [ கவிதை ]
- அறிஞர் அஸீஸ் காவியம்
- அல்லாமா இக்பால் காவியம்
- மூதூர் உமர் நெய்தனர் புலவரின் கவிதைகளில் பெண் கல்வி [ ஆய்வு ]
- கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம் முகைதீன் கவிதைகளில் இலக்கிய இன்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- கடலும் கண்ணீரும் [ சிறுகதை ]
- கவிஞர்கள் காண் மூதூர் [ கவிதைகளின் தொகுப்பு ]
- அல்ஹிலால்க் காவியம்
- தலைவரே வாருங்கள்
- ஈன்றோரை இயம்பும் இதயம்

எம்.எம்.ஏ.அஸீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

என்னரும் நண்பன் மர்கூம் எஹியா ஆசிரியர் எனக்கு ஓர் உன்னத நண்பனாகத் திகழ்ந்தார்

" உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கன் களைவதாம் நட்பு"

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப நட்பின் இலக்கணமாக இருந்தார் இவரின் நட்பு எனக்குக்கிட்டிய பேறாகும். உண்மையும் விசுவாசமும் நிறைந்த அவரின் நட்பை என்னால் என்றுமே மறக்க முடியாது அவர் மரணித்து விட்டதை என்உளம் இன்றும் ஏற்றுக்கொண்டதாக இல்லை அவர் என்னுடன் இருப்பதாகவும் உரையாடுவதாகவும் போன்றதோர் மனோ நிலையில்த்தான் இருந்து கொண்டிருக்கிறேன்.

என்னரும் நண்பன் மர்கூம் எஹியா ஆசிரியரின் சாயலில் யாரையேறும் காண்கின்ற போதில் எஹியாதான் என்றெண்ணி ஏமாந்து போகின்றேன். அவரின் நிலைவலைகள் என் உள்ளத்தில் தினமும் தளம்பிக் கொண்டே இருக்கின்றது. அவர் மரணித்த அந்த ஓர் வார காலத்துள் அவரின் நினைவிலும் கவலையிலும் மூழ்கி இருந்த என் உள்ளம் அவரைப் பற்றி இயம்பிய விடயங்கள் தான் "நண்பனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவிலும் நா" என்ற கவி நூலாக வெளிவந்துள்ளது. என்னரும் நண்பன் மர்கூம் எம்.எஸ். எஹறியா ஆசிரியரின் உன்னத தன்மைகளையும் உயரிய நடத்தைகளையும் இந்த ஊரும் உலகமும் என்றுமே மறக்காமலிருப்பதற்கு இந்நூல் உந்து சக்தியாக இருக்கும் எனவும் நம்புகின்றேன்

ஓர் உன்னத நண்பனுக்கு வார்த்தைக் கற்களால் நான் கட்டிய கவித்தாஜ் மஹறாலாய் இந்நூல் ஆகட்டும் எல்லாம் வல்ல ஏகனின் அருளால் என்னரும் நண்பன் எஹறியா சொர்க்கத்தின் சொந்தக்காரனாய்த் திகழட்டும் [ஆமீன்]

நன்றி

எம். எம். ஏ அனஸ்
20-05-2016

பெரியபாலம்
மூதூர்- 05
தொடர்பு :0776288299



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.எஸ். எஹியா [ ஆசிரியரின் ] வாழ்க்கைச் சுருக்கம்

மர்கூம் எம்.எஸ். ஏஹியா ஆசிரியர் மூதூர் 2ம் வட்டாரம் ஆனைச் சேனை எனும் இடத்தில் முகம்மது சுல்த்தான் பாத்துமா பீபி ஆகியோர்களுக்கு மகனாக 21-10-1966ம் ஆண்டு பிறந்தார் தன் கல்வியை 5ம் வகுப்பு வரை தி/அல்ஹிதாயா மகாவித்தியாலயத்திலும், 6ம் வகுப்பு முதல் க.பொ.த.(சா.த) வரை மூதூர் மத்திய கல்லூரி தேசியப் பாடசாலையிலும் கற்றார்

பின்னர் 1984 தொடக்கம் 1986 வரை இலங்கை பொலிஸ் சேவையில் இணைந்து இருவருடங்கள் பொலிஸ் அதிகாரியாகச் சிறப்புடன் பணியாற்றினார். பின்னர் 1990ம் ஆண்டு ஜனசவிய ஆசிரிய சேவையில் இணைந்து கொண்டார் உடற்கல்விப் பாட ஆசிரியராகச் சிறப்புடன் பணியாற்றினார் 25 வருட காலம் ஆசிரியப் பணிபுரிந்தார் இதில் 21 வருடங்கள் தி/ அல் ஹிதாயா மகா வித்தியாலயத்திலும் பிற்பட்ட 4 வருடங்கள் தி/ சதாம் வித்தியாலயத்திலும் ஆசிரியராகக் கடமையாற்றினார்

இவர் தி / அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் முறையே மர்கூம் A.C.K.முகம்மது அதிபர். ஜனாப் நயிமுத்தீன் அதிபர் ஜனாப் தாரிக் அதிபர் ஆகிய மூன்று அதிபர்களின் காலத்திலும் மிகவும் சிறப்பாக கற்பித்தல் நடவடிக்கைகளிலும் பாடசாலை முன்னேற்ற விடயத்திலும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றினார் மர்கூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் புனர்வாழ்வு அமைச்சராக இருந்த காலத்தில் தி/அல ஹிதாயா மகா வித்தியாலத்திற்கு இருமாடி கட்டடத்தை மர்கூம் எஹியா தான் பெற்றுக் கொடுத்தார்

மேலும் அன்று மர்கூடம் எம்.எஸ் எஹியா ஆனைச் சேனைப் பகுதியில் ஹீரோ விளையாட்டுக் கழகத்தை உருவாக்கி அங்கு விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவித்தார் அதேபோல் ஆனைச் சேனை கிராம உதயசபையின் உறுப்பினராகவும் ஆனைச் சேனை கிராம அபிவிருத்திச் சங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினராகவும் இருந்து அப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பு நல்கினார் மேலும் ஆனைச் சேனைப் பகுதியில் அன்று ஓர் நூலகத்தையும் உருவாக்கி அப்பிரதேச வாசிப்பறிவினை மேம்படுத்தினார்

மேலும் மர்கூடம் எம்.எஸ் எஹியா ஆசிரியர் அன்று குறிப்பாக ஆனைச் சேனைப் பகுதியிலும் ஊரிலும் ஏற்படுகின்ற சிறு சிறு பிரச்சினைகள் குடும்ப பிரச்சினைகள் போன்றவற்றையெல்லாம் தனது உயரிய அனுகுமுறை மூலம் தீர்த்து வைத்தார் அமைதி நாட்டம் கொண்ட அவர் மூதூரில் அமைதி நிலை உருவாக வேண்டும் என அயராது பாடுபட்டார் இனப்பிரச்சினை இல்லா ஊராக தமிழ் முஸ்லிம் உறவுகள் ஓங்கும் ஊராக மூதூர் மிளிர வேண்டும் என உள்ளத்தால் உவந்து அதற்காக உழைத்தார்

மூதூரை சார்ந்த தமிழ்ப் பிரதேச ஆசிரியர்களுடனும் பொது மக்களுடனும் நிறைய அறிமுகங்களை பெற்றிருந்தார் அவர்களுடன் மிகவும் நல்லமுறையிலே உறவுகளை பேணி வந்தார் விருந்தோம்பும் தன்மையிலே மூதூரில் உயரிய இடத்தில் மர்கூடம் எம்.எஸ் எஹியா ஆசிரியர் திகழ்ந்தார் எத்தகைய இன்னலையும் தாங்கிக் கொள்ளும் தன்மை படைத்தவராகவும் இருந்தார்

துணிவும் வீரமும் அவரை அணிசெய்து நின்றன எதற்கும் அஞ்சாத உள்ளம் அவரின் பேறாக இருந்தது அதிகாரத்திற்கு அடங்கிப்போகாத் தன்மையும் கொண்டிருந்தார் அதேவேளை அன்புக்கும் நீதிக்கும் கட்டுப்பட்டு நடந்தார் பெரியோர்களை மதிக்கும் பண்பில் உயரிய நிலையில் திகழ்தார் குடும்ப உறவுகளை மிகவும் நல்ல முறையில் பேணி நடந்தார் மற்றவர்களுக்கு உதவுகின்ற மனோபாவம் நிறைந்தவராகவும் உண்மை, நேர்மை கொண்டவராகவும் உயரிய நிலையில் வாழ்ந்தார் அடுத்தவர்களின் சொத்துக்களை அபகரிக்கும் எண்ணமோ, அவற்றுக்கு ஆசைப்படும் நிலையோ அவரிடம் கிஞ்சித்தும் காணப்படவில்லை கலாலான சம்பாத்தியம் இதனையே இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டார்

மேலும் மூதூர் மண்ணும், மக்களும் பொருளாதாரம், கல்வி, வாழ்க்கைத்தாரம் போன்ற எல்லா விடயங்களிலும் உயர்வுற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவேண்டுமென்று தன் உள்ளத்தால் உண்மையாகவே உவந்து, அதற்காக மாபெரும் தியாகங்களையெல்லாம் செய்திருந்தார் .அதற்காக வேண்டி மூதூர் மண்ணிலிருந்து உயரிய அரசியல் தலைமைத்துவம் உருவாக வேண்டுமென்று மிகவும் பாடுபட்டார் அன்று மூதூரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்திய கிளைக் செயலாளராக இருந்து மூதூரில் ஓர் அரசியல் எழுச்சியை ஏற்படுத்தினார் அன்று மூதூரில் முஸ்லிம் காங்கிரஸின் மாபெரும் சக்தியாகத் திகழ்ந்தார் தனது உடன் பிறந்த சகோதர்களான எம்.எஸ் வதூத் ஆசிரியரை மூதூரில் ஆசிரியர் காங்கிரஸின் செயலாளராகவும் மற்றச் சகோதரன் எம் எஸ் சியாத் என்பவரை மூதூர் இளைஞர் காங்கிரஸின் தலைவராகவும் பணியாற்றச்செய்து மூதூரில் முஸ்லிம் காங்கிரசை வளர்த்தெடுத்த முக்கிய மூலவராக மர்கூம் எம்.எஸ் எஹியா ஆசிரியர் திகழ்ந்தார் இந்த அரசியல் மூலம் அவர் ஓர் துளியளவு நன்மையைத்தானும் அனுபவித்தது கிடையாது.

மேலும் மற்றவர்களின் உளத்தைக் கவரும் வண்ணம் மிகவும் கனிவாகவும் நேர்த்தியாகவும் உரையாடும் தன்மையை இறைவன் அவருக்கு வரமாக அருளியிருந்தான் ஊரில் எஹியா ஆசிரியரை அறியாதவர்கள் யாருமில்லை என்ற அளவுக்கு நல்ல அறிமுகத்தைப் பெற்றிருந்தார் தன் ஆசிரியர் பணிக் காலமெல்லாம் மாணவர்கள் பக்கம் நின்று மாணவர்களுக்காகவே கதைத்து மாணவர்தம் உள்ளத்தில் நீங்கா இடம் பிடித்த ஓர் உன்னத ஆசிரியர் என்ற உயர் நாமத்தை அவர் தனக்குரித் தாய்ப் பெற்றுக் கொண்டார.

அல்ஹாஜ் அ.க. சுபைர் அதிபரின் மகள் றிசாத்தா என்பவரைத் தன் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்ட மர்கூடம் எம். எஸ் எஹியா அவர்களுக்கு முகம்மது சிமாஸ், பாத்திமா சிம்றா பாத்திமா சிரோமி ஆகிய பிள்ளைச் செல்வங்கள் வாரியாய்க் கிட்டியது
அவரின் உடன் பிறந்த

சகோதரர்களாக - மர்கூம் எம்.எஸ் பசீர்
எம். எஸ் வதூர் ஆசிரியர்
எம். எஸ் சியாத் ஆகியோரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகளாக - ஐனூான் மன்சூர்
சபீனா முகம்மது சுல்த்தான்
ஜமுனா றபிக்
ஆபிதா சாதிக்
கிமாயா ஜெஸீத்
கினாயா நப்ரிஸ்
ஆகியோரும் உள்ளனர்

உன்னத மனிதனாக உலகில் வாழ்ந்த எம்.எஸ் எஹியா ஆசிரியர் தனக்கு ஏற்பட்ட சிறுநீரகப் பாதிப்பு நோய் காரணமாக சிறு நீரக மாற்றுச் சத்திர சிகிச்சை செய்தும் பலனின்றி 03-06-2015ல் தன் 49ம் வயதில் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் மரணமானர் அவரின் ஜனாஸா மூதூர் பெரிய பள்ளி வாயல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது அல்லாஹ் அவரின் சகல பாவங்களையும் பொறுத்து அவரின் கபுறறையை மேலான சொர்க்கத்தின் பூஞ்சோலையாக ஆக்கியருள் புரிவானாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஹுியாக் குறள்

1. " என்னருமை நண்பன் எஹுியாவின் தன்மையெலாம்
நன்றென்று சொல்வேனே நான் "

பொருள்- என்னருமை நண்பனான எஹுியாவுடைய எல்லாச் செயல்களும் உயர்வானது என்று நான் சொல்வேன்

2. " நல்ல எடுகோளாய் நட்புக் எஹுியாவும்
அல்லோ இருந்தான் அறி "

பொருள் - உண்மையான நட்புக்கு ஓர் உயரிய உதாரணமாக எஹுியா இருந்தார்

3. " ஊரின் உயர்வை உவந்து எஹுியாவும்
காரியங்கள் ஆற்றினான் காண் "

பொருள் - மூதூர் மண்ணின் உயர்ச்சியை விரும்பி அதன் உயர்வுக்காக பலவகையான காரியங்களை எஹுியா செய்தார்

4. " ஊரில் அமைதியது ஓங்க எஹுியாவும்
பாரியதாய்ச் செய்தான் பணி "

பொருள் -மூதூரில் அமைதி நிலைகொள்ள பெரிதாக எஹுியா பாடுபட்டார் அதற்காகப் பல பணிகளையும் புரிந்தார்

5. " அச்சம் அறியா அகமே எஹுியாவின்
உச்ச உயர்வாம் உணர் "

பொருள் - பயம் இல்லாத உள்ளம் எகியாவுக்கு அமைந்திருந்தது அவ்வுள்ளம் அவருக்கு பெரும் சிறப்பைக் கொடுத்தது

6. " நற்றலைமை ஊரில் நிலைக்க எகியாவும்
பற்றுடனே செய்தான் பணி "

பொருள் - மூதூரில் நல்ல தலைமைத்துவங்கள் உருவாக வேண்டுமென விரும்பி அதற்காக விசுவாசமாக எஹுியா உழைத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. " விருந்தோம்பல் தன்மையிலே விஞ்சி எஹ்றியா
இருந்தானே என்றே இயம்பு "

பொருள் - விருந்தோம்பும் தன்மையில் எஹ்றியா மிகவும் உயர்ந்த நிலையில் காணப்பட்டார்

8. " மற்றார்க் குதவுவதில் மட்டற்ற மாமகிழ்வு
பெற்றான் எஹ்றியா பகர் "

பொருள் - மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ்வதில் எஹ்றியா மட்டற்ற மகிழ்வு கண்டார்

9. " மற்றோர் உயர்வில் மகிழ்ந்த எகியாவோ
நற்குணத்தோன் என்றே நவில் "

பொருள் - பிறருடைய உயர்ச்சியைக் கண்டு மகிழும் தன்மையுடையவராக இருந்த எகியா நற்குணம் நிறைந்த ஓர் மனிதராவார்

10. " கண்ணியம் காத்தெஹ்றியா காலமெலாம் வாழ்ந்ததனால்
மண்ணிலோ பெற்றான் மதிப்பு "

பொருள் -இவ்வுலகில் வாழ்ந்த காலமெல்லாம் கண்ணியம் பேணி வாழ்ந்த தன் காரணமாக எஹ்றியா மதிப்பு பெற்ற ஒருவராக மண்ணில் திகழ்ந்தார்

11. " தீங்கேதும் மற்றவர்க்கே தான்செய்ய நாடாத
பாங்கோன் எஹ்றியா பகர் "

பொருள் - மற்றவர்களுக்கு தீங்குகள் செய்கின்ற தன்மை இல்லாதவராக எகியா திகழ்ந்தார்

12. " இறையே! எஹ்றியாவும் இவ்வுலகில் செய்த
குறைபொறுத்துச் சொர்க்கம் கொடு "

பொருள் - இறைவனே இவ்வுலகில் வாழ்ந்த வேளை எஹ்றியா செய்த பாவங்கள் அனைத்தையும் பொறுத்து அவருக்கு சொர்க்கத்தைக் கொடுத்துவிடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதல் இன்றித் தவிக்கின்றேன்

✸ நல்ல நட்பே நற்பேறே !
நன்றே வாய்த்த என்நண்பே!
சொல்லிட முடியாச் சிறப்பெல்லாம்
சேர்ந்தே அமைந்த திருவுருவே !
பொல்லா மரணப் பிடியினுக்குப்
பலியே நீயும் ஆகியதால்
அல்லல் அதிகம் அடைகின்றேன்
ஆறுதல் இன்றித் தவிக்கின்றேன்

✸ பயணப் பொழுதின் வேளையிலே
பாதம் என்றே எனக்கானாய்
உயரிய நல்ல பண்புகளின்
ஊற்றாய் என்றும் திகழ்ந்திட்டாய்
கயவர்க் கஞ்சா நிலையினிலே
கடுமை வீரம் காத்திட்டாய்
துயரில் எம்மை விட்டேகித்
தூரம் ஏன்தான் போயிட்டாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ அரசியல் பொழுதின் வேளையிலே
அரணாய் எனக்கு ஆகிட்டாய்
பரந்த நல்ல சிந்நனையின்
பாங்கன் என்றே மிளிர்ந்திட்டாய்
விருந்தே ஓம்பும் தன்மையிலே
விஞ்சிட உன்னை முடியாதே !
சிறந்த நல்ல தன்மைகளில்
சிறப்பாம் இடத்தில் இருந்திட்டாய்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அருமை நட்பாய் அமைந்தோனே!

✸ அழகின் உருவாய் ஆனோனே!
அருமை நட்பாய் அமைந்தோனே!
இழப்பில் உந்தன் இழப்பேதான்
இன்னலில் மிகைத்து எனக்காகும்

✸ வாழும் காலம் வையத்தில்
வாய்மை வழியில் வாழ்ந்திட்டாய்
வீழும் காலம் உந்தனுக்கு
விரைந்தே வந்தது ஏனாமோ!

✸ நல்ல நட்பின் இலக்கணமாய்
நாநில மீதில் எனக்கானாய்
பொல்லா மரணம் எம்உறவைப்
பிரித்துச் சென்றதும் ஏனாமோ!

✸ சின்னஞ் சிறிய வயதினிலே
சீவியம் தன்னை உலகத்தில்
என்ன எதற்காகய் நீமுடித்தாய்
எல்லாம் ஏகன் வீதியாமோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ நல்லார் இதய பொய்கையெலாம்
நீயும் நிலைத்தே உள்ளதனால்
பொல்லா மரணம் உன்பெயரைப்
புவியில் மறைத்துச் செல்லாதே!

✱ ஆசான் என்னும் தொழிலுக்கு
அர்த்தம் நீயும் கொடுத்தாயே !
நேசம் கொண்டே மாணோர்க்கு
நன்கே கல்வி புகட்டிட்டாய்

✱ நல்ல ஆசான் உன்பிரிவால்
நாசம் தமக்கு நேர்ந்ததென
எல்லா மாணவ உள்ளங்களும்
ஏங்கி ஊரில் அழுகிறதே !

✱ நல்ல நட்பின் இலக்கணமாய்
நாநில மீதில் வாழ்ந்தஉனை
பொல்லா மரணம் பிரித்ததனால்
பாங்கர் கண்ணீர் மிகைக்கிறதே !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ உன்னத தந்தை என்றேதான்
உலகில் நீயும் திகழ்ந்திட்டாய்
இன்றோ நீயும் மறைந்ததனால்
இன்னலில் சேய்கள் துவல்கின்றார்

★ தாரம் மெச்சும் கணவன்எனத்
தரணியில் நீயும் மிளிர்நதிட்டாய்
பாரம் புவியின் வாழ்வென்றோ !
பிரிந்து நீயும் சென்றிட்டாய் !

★ விருந்து ஓம்பும் தன்மையிலே
விஞ்சிய நிலையில் வாழ்ந்தாயே!
பரந்த நல்ல சிந்தனையின்
பாசறை என்றும் திகழ்ந்தாயே!

★ மற்றோர்க் குதவும் தன்மையிலே
மகிழ்வே நீயும் கொண்டாயே !
உற்றார் உறவைப் பேணுவதில்
உவகை கொண்டு நடந்தாயே !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ ஊராம் மூதூர் உயர்ச்சியுற
உவந்தே பணிகள் புரிந்தாயே !
நேரிய தன்மை அனைத்தினிலும்
நன்கே நீயும் நிலைத்தாயே !

✱ பெரியோர் தன்மை மதிப்பதிலே
பேணுத லாக நடந்தாயே!
அரிய பணிகள் பலசெய்து
அகத்தில் எம்மில் நிறைந்தாயே !

✱ எதற்கும் அஞ்சா நெஞ்சத்தை
எழிலாம் என்றே பெற்றாயே!
பதவி பணத்திற் கடிபணியாப்
புண்பில் என்றும் நிலைத்தாயே !

✱ சோம்பல் இன்றி வாழ்வினிலே
சுறுசுறுப் பாகத் திகழ்ந்தாயே !
பூம்பொழில் என்றே புதுவசந்தம்
பூத்திட வாழ்வில் மிளிர்ந்தாயே !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ ஆவல் கொண்டு பயணங்கள்
அதிகம் அதிகம் செய்தாயே!
தேவை என்று வருவோர்க்குத்
தொகையாம் உதவியும் புரிந்தாயே!

✱ சமையல் கலையில் தேர்ந்ததனால்
சுவையாம் உணவை உவந்தாயே !
அமைதி நாட்டம் மிகைத்தனால்
அதற்காய் அதிகம் உழைத்தாயே !

நாட்டின் பலவாம் ஊர்களிலும்
நல்ல நட்புகள் பெற்றாயே
வீட்டில் மகிழ்வு நிலைகொள்ளும்
வாழ்வை வரமாய்ப் பெற்றாயே!

✱ ஊரும் இனமும் உயர்ச்சியுறும்
உன்னத நோக்கில் அரசியலில்
பாரிய நாட்டம் கொண்டேதான்
பலமாய் அதற்காய் உழைத்தாயே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கோ! பிரிந்து போனானே!

எனது நண்பன் எனைவிட்டு
எங்கோ பிரிந்து போனானே!
கனத்த வேதனை தந்தவனும்
காணாத் தூரம் சென்றானே!

நிதமும் அவனின் நினைவாலே
நானும் கண்ணீர் சொரிகின்றேன்
இதமே என்று எனக்கானோன்
இல்லை என்றே இன்றானான்

அவனைப் போன்ற நண்பனைநான்
அவனியில் காணல் அரிதென்பேன்
உவப்பே கொண்டு பழகிடுவான்
உன்னதம் உறவில் பேணிடுவான்

புன்னகை முகத்தை அணிசெய்யப்
பூரிப் பாகப் பேசிடுவான்
இன்னல்ப் பொழுதின் வேளையிலும்
இன்ப மேவ நடந்திடுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தே அவனும் சென்றாலும்

மனதில் அவனின் நினைவேதான்

நிறைவாய் என்னில் நிறைகிறதே!

நித்தம் வேதனை ஆகிறதே!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என்னருமை நண்பன் எங்கே!

என்னருமை நண்பன் எங்கே?
எழிலுருவின் தோற்றம் எங்கே?
புன்னகையின் வதனம் எங்கே?
புவியினிலே அவனும் எங்கே?

உன்னதமாம் உள்ளம் எங்கே?
உயரியதாம் தன்மை எங்கே?
கண்ணியத்தின் நடத்தை எங்கே?
கண்டிடத்தான் முடிய வில்லை

மரணமே அவனை நீயும்
மறைத்தெங்கே கொண்டு சென்றாய்
சிறந்ததோர் நண்பன் மறைவால்
சிந்தையே குழம்பி யுள்ளேன்

ஐம்பதாம் அகவை தானும்
ஆகிடா அவனை நீயும்
இம்மண்ணில் பிரித்தே சென்ற
இடர்தன்னை ஏன்தான் செய்தாய் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்க்கு உதவும் நல்ல
மாண்பான தன்மை கொண்ட
உற்றபெரும் நண்பன் எஹறியா
உயிர்தன்னை ஏன்தான் எடுத்தாய் !

அவனுமே இல்லா வாழ்வில்
ஆனந்தம் எனக்கு ஏது?
புவனத்தில் அவனின் நினைவால்
பெரியதோர் கவலை எனக்கு

நண்பனாம் அவனை யானும்
நாளுமே நினைத்தே உள்ளேன்
அன்னவனை எங்கே காண்பேன்
அறைவீரோ எனக்கு மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு சென்றாய்?

நீயுமே உலகை விட்டு
நீங்கியே சென்ற தாலே
வாயிலே வார்த்தை யாவும்
வருகுதே கவிதை யாக

சமையலிலே ஆர்வம் கொண்டு
சமைத்து நாம் உண்ட இன்பம்
அமையாதே இனியும் இங்கே!
ஆவிநீ துறத்த தாலே!

அரசியலின் தேர்தல் வேளை
ஆனதோர் சக்தி யானாய்
உரமுமே இழந்து உள்ளேன்
உரைத்திடுவாய் யாது செய்வேன்

தேவையதன் போதில் எல்லாம்
தக்கதோர் உதவி யானாய்
ஆவியே துறந்து நீயும்
அடைக்கலமாய் எங்கே போனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்தின் போதில் எல்லாம்
பாதமாய் இருந்த நீயும்
துயரத்தில் என்னை விட்டுத்
தூரவே எங்கு சென்றாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயமில்லா நெஞ்சம் எங்கே?
பண்பிலே உயர்ந்தோன் எங்கே?
உயரியதாம் உள்ளம் எங்கே?
உன்னதமாம் தன்மை எங்கே?

எதுவுமே தெரியா திங்கு
ஏங்கியே யானும் உள்ளேன்
புதுமையாய் இருக்கு திங்கே
பிரிந்தவனும் போன சேதி

புவியினிலே அவனைத் தேடிப்
புலம்பியே யானும் உள்ளேன்
கவலையிலே தோய்ந்து நாளும்
களிப்பின்றி வாழு கின்றேன்

என்னருமை நண்பன் எஹியா
எங்குதான் மறைந்து சென்றான்
என்னையுமே தவிக்க விட்டு
ஏன்தானோ அவனும் போனான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்ற வயதில் அவனும்
வாழ்வதனை முடித்த தேனோ
வீழ்ந்ததே எந்தன் மகிழ்வு
விளங்குமே அவனுக் இதுவும்

மரணமே மண்ணில் நீயும்
மாபெரும் கொடுமை செய்தாய்
பரந்ததோர் பண்பைக்கொண்ட
பாங்கனைநீ பிரித்தே சென்றாய்

வாழ்வதனின் எல்லை தன்னை
வந்திடமுன் அவனை நீயும்
வீழ்ந்திடவே வைத்த சேதி
விந்தையாய் இருக்கு தம்மா !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியின் வினை

விதியின் வினையால் என்நண்பன்
வையம் விட்டுப் போனானே !
பதியில் நானும் அவன்பிரிவால்
படுகிற பாடோ மிகப்பெரிது

உள்ளம் அவனின் நினைவாலே
உருகி ஒடிந்து போகிறதே
வெள்ள மாகக் கண்ணீரை
வடித்தே வேதனைப் படுகின்றேன்

வாழும் வயதில் அன்னவனும்
வாழ்வை முடித்துப் போனானே
தோழமை இல்லா நிலைமைக்குத்
தொல்லையில் என்னை விட்டானே

பிறருக் குதவி செய்வதிலே
பிரியம் கொண்டு வாழ்ந்தவனும்
மறந்தா மண்ணை விட்டகன்றான்
மாபெரும் வேதனை எனக்களித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைஞ்சல்

இறையே! இறைஞ்சிக் கேட்கின்றேன்
இனிய நண்பன் எஹியாவின்
குறைகள் யாவும் பொறுத்திடுவாய் !
கருணை அவர்க்குக் காட்டிடுவாய் !

அருமை நண்பன் எஹியாவும்
அடங்கி யுள்ள மண்ணறையை
அருளால் இறையே ! சொர்க்கத்தின்
அழகுப் பூங்கா வாக்கிடுவாய்

எனது நண்பன் எஹியாவின்
எல்லாப் பிழையும் இறையோனே !
உனது அருளால் பொறுத்திடுவாய்
உவந்து அவரை ஏற்றிடுவாய்

அருளில் மிகைத்த அல்லாஹ்வே
அருமை நண்பன் எஹியாவை
பொருத்தி நீயும் சொர்க்கத்தைப்
பேறாய் அவர்க்குக் கொடுத்திருவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனை நவிலும் நா

✸ என்னை விட்டு மறைந்து போன
நண்பனே எஹியாவே !
உன் நினைவுகளின் சங்கமத்தில்
என் வார்த்தைகளும்
கவிதைகளாய் அல்லவா
கருக்கொண்டு வருகிறது.

✸ இது
ஓர் உண்மை நண்பனுக்காய்
வார்த்தைக் கற்களால்
நான் கட்டிய
ஓர் கவித் தாஜ்மகால்

✸ மரணத்தின் பிடியில்
நீ சிக்கினாய்
ஆனால்
வேதனையில் அகப்பட்டுக் கொண்டது
நாங்கள் தானே !
உன் மரணத்தால்
மரணித்துப் போனது
எங்கள் மகிழ்வும் தானே/

நீ மரணித்த 03.06.2015
எங்கள் சந்தோச சாம்ராஜ்சியம்
சரிந்து போன நாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✸ அந்நாள்
எங்கள் பலம்
குன்றிப் போன நாள்

✸ இன்றைய பகலை
உன் மரணம்
இருள் சூழ வைத்துவிட்டதே !
சோகத்தின் சொந்தக்காரர்களாய்
இன்று நண்பர்கள் எல்லோரும்
ஆகிவிட்டதால் .............
யாருக்கு யார்? ஆறுதல் சொல்வது !
பிறரின் நலனுக்காய்
உழைத்த உள்ளம்
எப்படி ! உடைந்து போனது !

✸ சமூக உயர்ச்சிக்காய்
பாடுபட்ட ஓர் உயிர்
இன்று உறக்கம் கொண்டது

✸ இன நல்லுறவை நவின்ற நா......
இன்று .
இயக்கமற்றுப் போனது

✸ விருந்தோம்பி மகிழ்ந்த உள்ளம்
இன்று தனக்கான உணவையும்
நிரந்தரமாகத் தவிர்த்துக் கொண்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நண்பனே !
உன்னை மண்ணிலிருந்து மறைக்க
மரணம் ஏன்தான் ? விரும்பியதோ!

* உன் மரணம்
மூதூரின் இலையுதிர் காலம்

* உன் வாழ்வு
இம்மண்ணில்
ஓர் .. மகா காவியம்

* நண்பனே !
உனக்காகக் கண்ணீர் மட்டும் வடித்துவிட்டு
கலைந்து செல்ல என்னால் முடியாது

* என் இதயத்துள் இருக்கும்
உன் நினைவை என்னால்
இறக்கி வைக்கவும் முடியாது

* உன் பிரிவு பற்றிய கவலைகளைக்
கவி வரிகளால் கொஞ்சம்
குறைத்துக் கொள்ள முயழ்கிறேன்

* நண்பனே!
ஊரில் உன் வாழ்க்கைச் சுவடு
உயரியதோர் அதிசயம்

* அநீதிகள் அரசோச்சிய இடங்களில் எல்லாம்
நீ....... நீதியின் நா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ நீ.
கானாங் கோழிகள் கூட்டத்தில்
ஓர் கானமயில்

✱ பூனைகளிடை பிறந்த
ஓர் புலி

✱ சிறு ஆட்டுப்பட்டியிலே
உலாவிய சிறுத்தை

✱ சந்தர்ப்ப வாதிகளின் சமூகத்தில்
நீ...... ஓர்
கொள்கைப் பிரளயம்

✱ சுயநலத்தின் சங்கமிப்புச் சனங்களிடை
நீ ....... ஓர்
இலட்சியப் பெருநதி

✱ நீ.......
கோழைகளின் கூக்குரலிடை ஒலித்த
சிங்கத்தின் கர்ச்சிப்பு

✱ நீ........ கூழாங் கற்களிடை விளைந்த
கோடியின் மாணிக்கம்

✱ அதர்மத்தை ஆசித்த சமூகத்தில்
நீ.....சத்தியத்தின் குரல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ கொடுமைக்குக்
கொடி பிடித்தோர் மத்தியில்
நீ.... நீதியின் நிலைக்களம்

✱ நீ
சாக்கடையில் வீசிய
நறுமணத் தென்றல்

✱ சண்டைகளின் சங்கமமாய்
ஆன சமூகத்தில்
அமைதியின் தூதுவனாய்
வந்தவன் .. நீ

✱ நீ ......... இன நல்லுறவின்
இணைப்புப் பாலம்
உன் பேச்சின் வசிகரத்தால்
பேய்களையும்
பணியச் செய்தாய்

✱ நீ ....... பேசினாய்
கொடுமைக் காரர்கள்
கருணையாளர்களாய்க்
காட்சி தந்தனர்

✱ நீ கதைத்தாய்
சண்டைகள்.......
சமாதானமாய்ச் சங்கமித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பயம்

நீ ........ அறியாத ஒன்று

* பலம்

உன் உடைமை

* அநீதிக்கும், அதிகாரத்திற்கும்
அடங்கிப் போனது
உன் வாழ்க்கை ஏட்டில் கிடையாது

* மனுதர்மத்தின்
மகுடமாய்த் திகழ்ந்தாய்
அதனால் ..........
வன்செயல்களின்
விரோதி என்றே விளங்கினாய்

* நீ ...... கதைத்தாய்
அவை அறிவார்ந்த
ஆலோசனைகளாய் ஆகின

* நீ ..... அரசியல் பேசினாய்
அவை....
அரசியல் சித்தாந்தங்களாயின

* உன் ஆசிரியப் பணி ஏட்டைப்
புரட்டிப் பார்க்கின்ற பொழுது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நீ ..... கற்பித்த
உடற்கல்விப் பாடம்
ஏ(A) பெறுபேற்றால் தானே
ஆசீர்வதிக்கப்பட்டது

* நியாயத்தின் குரலாக
மூதூரில் மிளிர்ந்தவன் நீ

* உயரிய உரையாடல் மூலம்
மனித உள்ளங்களை
வெற்றி கொள்ள முடியும் என்பதை
உன்னால்த் தான்
நாம் உணர்ந்து கொண்டோம்

* நண்பனே !
முதுமைக்கு முன்பே
வாழ்வை முடித்துக் கொண்டவனே !

* உன் உள்ளத்தில்
நிறைந்திருந்த தெல்லாம்
ஊரின் உயர்ச்சி ஏக்கம்தானே !

* மூதூர் தகுந்த தலைமைகளால்
அலங்கரிக்கப்படல் வேண்டும்
அது அபிவிருத்தியால்
ஆசீக்கப்படல் வேண்டும்
என்றெல்லாம் கனவு கண்டவன் ....நீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நண்பனே !
என்கடந்கால
அரசியல் சுவடுகளை
உற்று நோக்குகிறேன் ..
அதில்..... உன்உருவம் தான்
அதிகம் தென்படுகின்றது
இருட்டு அரசியலில்
நெறி தெரியாதிருந்த

மூதூர் மக்களுக்காக
அஷ்.'.ரபின்முஸ்லிம் காங்கிரஸ் ஒளிசுடரை
அன்று .... நான் ஏந்தி வந்த போது ..
அதற்கு உறுதுணையாய் இருந்த
முக்கிய மூலவர்களில்
நீதானே! முதலிடத்தில் இருந்தாய்

* உன் உடன் பிறந்த சகோதர்கள்
வதாத் சியாத்துடன் முஸ்லிம் காங்கிரசுக்காய்
நீ .. செய்த தியாகங்கள்
மிக ..மிக அதிகம்
மூதூரில் முஸ்லிம் காங்கிரஸ்
அதிகம் கடமைப்பட்டிருப்பது
உனக்குத் தானே !

* புன்னகையும்
வசீகர அழகும்
வரமாகப் பெற்றவனே !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மரணம் உன்னைப் பிரித்து விட்டாலும்
என்றும் ..நீ
எங்கள் உள்ளங்களில்
உலாவிக் கொண்டிருக்கிறாய்
உன்னை நாம்
நினைக்கும் பொழுதெல்லாம்
உயிர் பெற்றெழு கின்றாய்

* இறைவனே!
உன்னத நட்பின் இலக்கணமாய் இருந்த
என் நண்பன் எஹியா
புவியில் புரிந்திட்ட பாவங்கள்
அனைத்தையும் பொறுத்து
உன் மேலாம் சொர்க்கத்தில்
நிரந்தரமாய்த் தங்கிவிட
உன்னருள் அனுமதியை
அவனுக்கு அளித்து விடு !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னருமை நண்பன் எகியாவை எண்ணியே
என்நா நவின்றிட்ட ஏற்றகவி - தன்னையான்
நன்முறையாய்த் தந்திட்டேன் நூலாக - அன்னோனோ
உன்னதத்தில் மேலோன் உணர்.

**மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்**

ISBN 978-955-42444-3-6

ART 0776566173

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org